## ஜூன் – 15

**"தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்." - ஏசா 55 : 3**

நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள், மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தங்களுடைய ஆத்துமா தேவனை வாஞ்சித்துக் கதறுகிறவர்கள், அவரைக் கண்டுகொண்டு அவருக்குத் தங்களை பிரதிஷ்டை செய்து, பரிசுத்த ஆவியின் அபிசேஷகத்தைப் பெற்று தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று பரிசுத்த ஆவி தங்களுடைய ஆவியுடனே கூடசாட்சி கொடுத்தார்கள். அபிசேஷகம் பண்ணப்பட்ட பிள்ளைகளாகத் தங்களில் உண்மையான பிள்ளைகளுடைய தகுதியான விசேஷ குணங்களாகிய எஜமான் பக்தி, உண்மை, ஆர்வம், சக்தி, தைரியம், விவேகம் முதலியவைகளைக் கண்டு கொள்ளக்கூடியவர்களாயிருக்கிறவர்கள். ஆகிய இவர்கள் எல்லோருமே, கர்த்தர் தங்களோடு ஒரு நித்திய உடன்படிக்கையை செய்திருக்கிறதும், தங்களுக்கு "தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகள்" உரித்தாகிறதுமான அந்த வகுப்பாக அமைகிறார்கள். **- Z '96, 29 (R 1936).**

உடன்படிக்கைகள் இரண்டு விதமானவைகள். ஒன்று, ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினருடன் நிபந்தனையில்லாமல் கட்டுகிற ஒரு வாக்குத்தத்தம், இரண்டாவது, இரண்டு பிரிவினர்களை ஒன்றோடொன்று நிபந்தனையினால் கட்டுகிற ஒரு ஒப்பந்தம். இங்கே குறிக்கப்பட்டிருக்கிற உடன்படிக்கை (தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகள்) முதலில் சொல்லப்பட்டிருக்கிற பிரிவை சேர்ந்தது. பிரியமானவனான தாவீது, கிறிஸ்து வகுப்பாரைக் குறிக்கிறார். தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகள் இந்த வகுப்பாருக்கு உரிதாயிருக்கிற வாக்குத்தத்தங்களாகும். அவைகள் நிச்சயமானவைகள். ஏனென்றால், அவைகள் தேவனுடைய ஆணையினால் பத்திரப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் நித்தியமானவைகள். ஏனென்றால், அவைகளுடைய அனுகூலங்கள் நித்தியமாக அனுபவிக்கப்படும். அவைகள் ஒரு ஆச்சரியமான சுதந்திரம் இப்படிப்பட்டவர்கள் கர்த்தரிடத்திலிருந்து எவ்வளவு சிறப்பான ஒரு பங்கைப் பெற்றிருக்கிறார்கள். **-P '33, 79.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஆதி 22:16-18; 2சாமு 23:5; சங் 89:34-37; அப் 13:34; ரோம 9:7-13; கலா 3:8,9,14-19, 26-29; 4:21-31; எபி 6:13-20; 11:17-19; 2கொரி 1:20.

**கோபுர வாசிப்பு : Z ',09 27 (R 4318)**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் வாக்குத்தத்தங்கள் எனக்கு என்ன அர்த்தமுள்ளவைகளாயிருந்தன? அவற்றை நான் எப்படி உபயோகித்தேன்? தொடர்ந்து வந்த பலன்கள் எவை?